# மே – 21 –திங்கள்
## புனித 7ம் கிரகோரி திருத்தந்தை
## “நம்புகிறவருக்கு எல்லாம் நிகழும்” (மாற் 14:23)

## முதல் வாசகம் : யாக்கோபு 3 : 13 – 18

சகோதர சகோதரிகளே!,உங்களிடையே ஞானமும் அறிவாற்றலும் உடையவர் யாராவது இருந்தால், ஞானம் தரும் பணிவாலும், நன்னடத்தையாலும் அவற்றைக் காட்டட்டும்.உங்கள் உள்ளத்தில் பொறாமையும், மனக்கசப்பும், கட்சிமனப்பான்மையும் இருக்குமானால் அதைப்பற்றிப் பெருமை பாராட்டவேண்டாம். உண்மையை எதிர்த்துப் பொய் பேசவேண்டாம். இத்தகைய ஞானம் விண்ணிலிருந்து வருவது அல்ல. மாறாக, மண்ணுலகைச் சார்ந்தது. அது மனித இயல்பு சார்ந்தது. பேய்த்தன்மை வாய்ந்தது. பொறாமையும், கட்சி மனப்பான்மையும் உள்ள இடத்தில் குழப்பமும் எல்லாக் கொடுஞ்செயல்களும் நடக்கும். விண்ணிலிருந்து வரும் ஞானத்தின் தலையாய பண்பு அதன் தூய்மையாகும். மேலும் அது அமைதியை நாடும் பொறுமை கொள்ளும். இணங்கிப்போகும் தன்மையுடையது. இரக்கமும், நற்செயல்களும் நிறைந்தது. நடுநிலை தவறாதது. வெளிவேடமற்றது. அமைதி ஏற்படுத்துவோர் விதைத்த அமைதி என்னும் விதையிலிருந்து நீதியென்னும் கனி விளைகிறது.

**பதில்பாடல் :** ஆண்டவரின் நியமங்கள் சரியானவை
இதயத்தை மகிழ்விப்பவை

## நற்செய்தி : மாற்கு 9 : 14 - 29

அக்காலத்தில் யாக்கோபு யோவான் ஆகிய மூவரும் மற்ற சீடரிடம் வந்தபொழுது, பெருந்திரளான மக்கள் அவர்களைச் சூழ்ந்திருப்பதையும் மறைநூல் அறிஞர் அவர்களுடன் வாதாடுவதையும் கண்டனர்.மக்கள் அனைவரும் இயேசுவைக் கண்ட உடனே மிக வியப்புற்று அவரிடம் ஓடிப்போய் அவரை வாழ்த்தினர்.அவர் அவர்களை நோக்கி, ”நீங்கள் இவர்களோடு எதைப்பற்றி வாதாடுகிறீர்கள்?” என்றுகேட்டார்.அப்போது கூட்டத்திலிருந்து ஒருவர் அவரைப் பார்த்து, ”போதகரே. தீய ஆவி பிடித்துப் பேச்சிழந்த என்மகனை உம்மிடம் கொண்டு வந்தேன். அது அவனைப்பிடித்து அந்த இடத்திலேயே அவனைக் கீழே தள்ளுகிறது. அவன் வாயில் நுரைள்ளிப் பற்களை நெரிக்கிறான் உடம்பும் விறைத்துப்போகிறது. அதை ஓட்டிவிடும்படி நான் உம் சீடரிடம் கேட்டேன் அவர்களால் இயலவில்லை” என்று கூறினார். அதற்கு அவர் அவர்களிடம், ”நம்பிக்கையற்ற தலைமுறையினரே. எவ்வளவு காலம் நான் உங்களோடு இருக்க இயலும்? எவ்வளவு காலம் நான் உங்களைப் பொறுத்துக்கொள்ள இயலும்? அவனை என்னிடம் கொண்டுவாருங்கள்” என்று கூறினார்.அவர்கள் அவனை அவரிடம் கொண்டுவந்தார்கள். அவரைக் கண்டவுடன் அந்த ஆவி அவனுக்கு வலிப்பு உண்டாக்க, அவன் தரையில் விழுந்து புரண்டான் வாயில் நுரை தள்ளியது.அவர் அவனுடைய தந்தையைப் பார்த்து, ”இது இவனுக்கு வந்து எவ்வளவு காலமாயிற்று?” என்று கேட்டார். அதற்கு அவர், ”குழந்தைப் பருவத்திலிருந்து இது இருந்துவருகிறது.இவனை ஒழித்துவிடத் தீயிலும் தண்ணீரிலும் பலமுறை அந்த ஆவி இவனைத் தள்ளியதுண்டு. உம்மால் ஏதாவது செய்ய இயலுமானால் எங்கள்மீது பரிவு கொண்டு எங்களுக்கு உதவி செய்யும்” என்றார்.இயேசு அவரை நோக்கி, ”இயலுமானாலா? நம்புகிறவருக்கு எல்லாம் நிகழும்” என்றார்.உடனே அச்சிறுவனின் தந்தை, ”நான் நம்புகிறேன். என் நம்பிக்கையின்மை நீங்க உதவும்” என்று கதறினார்.அப்போது மக்கள் கூட்டம் தம்மிடம் ஓடிவருவதை இயேசு கண்டு, அந்தத் தீய ஆவியை அதட்டி, ”ஊமைச் செவிட்டு ஆவியே,உனக்குக் கட்டளையிடுகிறேன் இவனை விட்டுப் போ் இனி இவனுள் நுழையாதே” என்றார்.அது அலறி அவனுக்கு மிகுந்த வலிப்பு உண்டாக்கி வெளியேறியது. அச்சிறுவன் செத்தவன் போலானான். ஆகவே அவர்களுள் பலர், ”அவன் இறந்துவிட்டான்” என்றனர். இயேசு அவன் கையைப் பிடித்துத் தூக்கிவிட்டார். அவனும் எழுந்தான்.அவர் வீட்டில் நுழைந்ததும் அவருடைய சீடர் அவரிடம் தனிமையாக வந்து, ”அதை ஏன் எங்களால் ஓட்ட இயலவில்லை?” என்று கேட்டனர்.அதற்கு அவர், ”இவ்வகைப் பேய் இறை வேண்டலினாலும் (நோன்பினாலும்) அன்றி வேறு எதனாலும் வெளியேறாது” என்றார்.

**தியானம்:** ஒரு குழந்தை தனது பெற்றோரை முழுமையாக நம்பி இருக்கின்றது. அவர்களின் கைகளைப் பற்றிக்கொண்டு நடக்கும்போது உறுதியான பாதுகாப்பையும், தனது பெற்றோர் தன்னை கைவிடாமல், எந்த ஆபத்து வந்தாலும் தன்னை காப்பாற்றுவார்கள் என்ற நம்பிக்கையுடனும் நடக்கின்றது. அதுபோலத்தான் நாமும் யேசுவின் கரங்களைப் பற்றிப் பிடித்து வாழ்வேண்டும். இதுவே எமது விசுவாசமும் கூட. நற்செய்தியில் நாம் பார்க்கும் தந்தையும் தனது மகனை பிடித்திருக்கும் தீய ஆவியில் இருந்து விடுபட வேண்டி யேசுவை நாடி வந்தார், அவர் தமது விசுவாசத்தை முழுமையாக அறிக்கை இட்ட படியால் அவரது மகனை பீடித்த அசுத்த ஆவி வெளியேறியது. இன்று நாமும் பலவிதமான ஆவிகளின் பிடியில் சிக்கி தவிக்கின்றோம், பணம், புகழ், பதவி, ஆசை, போதைவஸ்து பாவனை, குடிப்பழக்கம், காம இச்சை போன்றவை நம்மை பிடித்திருக்கும் அசுத்த ஆவிகளே. இதனால் எத்தனை குடும்பங்கள் இன்று கண்ணீரோடு வாழ்கிறார்கள். பாதிக்கப் படுகின்ற குழந்தைகள், இள வயதினர் ஏராளம். ஏமாற்றப்படுகின்றவர்களும், ஏமாற்றுபவர்களும் அதிகம். உடல், உளத் தாக்கத்தினால் பாதிக்கப் பட்டவர்கள் அதிகம். இவ்வாறான அசுத்த ஆவிகள் எம்மை விட்டு அகல வேண்டும் என்றால் நோன்பும், இறை வேண்டுதலும் தேவை என்பதனை யேசு எமக்கு வெளிப் படுத்துகின்றார். செபம் கிறிஸ்த்தவர்களின் ஆயுதம். அதன் வல்லமை உணர்ந்த்வர்களுக்குத்தான் தெரியும். எனவே எல்லோருக்காகவும், குறிப்பாக தனிமையில் வாடுவோருக்காகவும், பல வகைகளில் பாதிக்கப் பட்டவர்களுக்காகவும், கைவிடப்பட்டவர்களுக்காகவும் செபிப்போம்.